## பாடம் - 9

## முஹம்மதுர் ரசூலுல்லாஹ்வின் பொருள்

## الدرس التاسع

## معنى: أن محمداً رسول الله ﷺ

இதன் பொருள், முஹம்மது நபி அல்லாஹ்வின் அடியார் என்றும், மனித சமுதாயம் முழுமைக்கும் அனுப் பப்பட்ட இறைத்தூதர் என்றும் உளப்பூர்வமாக ஒப்புக் கொண்டு அதற்கு ஏற்ப செயல்படுவதாகும். அதாவது அவர்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதும், அவர்கள் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்துவதும், அவர்கள் விலக்கிய, கண்டித்த தீமைகளிலிருந்து விலகு வதும் மற்றும் அவர்கள் வகுத்துத் தந்த முறைப்படியே அல்லாஹ்வை வணங்குவதுமாகும்.

முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று சாட்சி சொல்வதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அவை 'அப்துஹு, வரசூலுஹு'-அல்லாஹ்வின் அடியார், அவனது தூதர் என்பதாகும். இவ்விரண்டும் நபி (ஸல்) அவர்கள் விஷயத்தில் மிகைப்பாட்டையும் குறைபாட்டையும் அகற்றிவிடுகிறது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவார்கள். சிறப்பான இவ்விரண்டு தன்மைகளில் அவர்கள் மக்களிலேயே மிகப் பரிபூரணமானவர்கள். இந்த இடத்தில் அப்து என்பதன் பொருள் இறைவனை வணங்கும் அடிமை என்பதாகும். அதாவாது நபி(ஸல்)அவர்கள் ஒரு மனிதர் தான்.

மனிதகுலம் எதிலிருந்து படைக்கப் பட்டுள்ளாதோ அதிலிருந்தே அவர்களும் படைக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய மனிதர்களுக்கு இருக்கின்ற தன்மைகள், சுபாவங்கள் அவர்களுக்கும் உண்டு.

﴿ قُلْ إِنَّمَا أَنَا بَشَرٌ مِثْلُكُمْ ... ﴾ ﴿الكهف: ١١٠﴾

அல்லாஹ் கூறுகிறான்: நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் என்று (நபியே!) கூறுவீராக! (18:110)

﴿ الحَمْدُ لله الَّذِي أَنْزَلَ عَلَى عَبْدِهِ الْكِتَابَ وَلَمْ يَجْعَلْ لَهُ عِوَجًا ﴾ ﴿الكهف: ١﴾

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனே தன் அடியார் மீது இவ்வேதத்தை இறக்கியருளினான். இதில் எவ்விதக் கோணலையும் வைத்திடவில்லை. (18:1)

**ரசூல் என்பதன் பொருள்** - சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லி, நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்து, அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கு மனித சமுதாயம் முழுவதற்கும் தூதராக அனுப்பப்பட்டவர் என்பதாகும். இவ்விரு தன்மைகளைக் கொண்டு சாட்சி சொல்வது நபி(ஸல்)அவர்கள் விஷயத்தில் வரம்பு மீறும் போக்கையும் குறைபாடான போக்கையும் நீக்கிவிடுகிறது.

தம்மை நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்கின்ற பெரும்பாலோர் அவர்கள் விஷயத்தில் வரம்பு மீறி அவர்களை அடிமை நிலையிலிருந்து உயர்த்தி கடவுள் அந்தஸ்திற்கு கொண்டு சென்றுவிடுகின்றனர். அல்லாஹ்வை விடுத்து நபியிடமும் இரட்சிப்புத் தேடுகின்றனர். தேவைகளை நிறைவு செய்தல், கஷ்டங்களை நீக்குதல் போன்ற அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் முடியாதவற்றை அவர்களிடமே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வேறு சிலர் அவர்களின் தூதுத்துவத்தை மறுத்துவிடுகின்றார்கள் அல்லது அவர்களைப் பின்பற்றுவதில் அலட்சியம் காட்டி அவர்களுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் முழுமையாக நிறைவேற்றாமல் குறைத்துவிடுகின்றார்கள். அவர்கள் கொண்டு வந்தவற்றிற்கு மாற்றமான கூற்றுக்களையே ஆதாரமாகக் கொள்கிறார்கள்.